9th August 1966]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) The Government have sanctioned a scheme, as an experimental measure for one year, for the setting up of an Institute of Library Science to give training to the unqualified Librarians employed under the Local Library Authorities and to meet the required number of qualified librarians under the Development programmes of the Local Library Authorities. The Institute is to function as one of the wings of the Connemara Public Library and under the overall charge of the Director of Public Libraries. The duration of the training course is three months and the first training course for a batch of 30 trainees commenced on **21st** March 1966.

திரு. வை. சங்கரன் : *தனியார் நூல் நிலையங்கள், தனிப்பட்ட பள்ளிகள், கல்லூரிகள் இவைகளில் இருக்கிற நூல் நிலையங்களில் லைப்ரேரியன்ஸ் அன்க்வாலிபைடாக இருக்கிறார்கள். அவர்களுக்குப் பயிற்சி கொடுக்க உத்தேசம் உண்டா?*

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவர்கள் தகுதி பெறவேண்டும் என்ற நோக்கத்துடன்தான் இந்த ட்ரெயினிங் ஆரம்பிக்கப் பட்டிருக்கிறது.

பொம்மை ஆட்டக் கலை

** 244 கேள்வி.—திரு. **து. ப. அழகமுத்து** : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—*

(அ) பழங்கால தமிழ்நாட்டின் கலைகளில் ஒன்றான பொம்மை ஆட்டக் கலையை ஊக்குவிக்கும் திட்டம் ஏதேனும் உண்டா ?

(இ) ஆமெனில், அதன் விவரமென்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, **Sir.**

(*b*) In 1965 the Government sanctioned a scheme for the establishment of a Training Centre for manufacture of Leather Puppetry. The total expenditure for two years for this scheme is Rs. 31,200. Six students are undergoing training in leather puppetry at the Central Leather Research Institute, Adyar, for a period of two years on payment of stipend of Rs. 75 per mensem each. The scheme is being implemented by the Madras Natya Sangh with the grant sanctioned by this Government.

புலவர் கா. கோவிந்தன் : இந்த பொம்மை ஆட்டங்கள் இரண்டு வகையாக நடைபெறுகின்றன. இராக்காலங்களில் திரை கட்டி நிழல்படமாக காண்பிப்பது ஒன்று. கயிறு கட்டி அதன் மூலமாகவும் பொம்மலாட்டம் காண்பிக்கிறார்கள். இவற்றில் எதை அரசாங்கம் ஊக்குவிக்கிறது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்தக் கேள்வி பொம்ம லாட்டத்திற்குத் தோல் பொம்மைகளைத் தயார் பண்ணுவது பற்றியது. இரண்டு விதமான பொம்மலாட்டத்திற்கும் இது பயன் படும்.